ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2306/08 - 2022 නොවැම්බර් මස 14 වැනි සඳුදා - 2022.11.14
*2306/08 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கெஸ்பேவ நகர சபை அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்தல்**

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8F, பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரையினை கருத்தில் கொண்டதற்கமைய, கெஸ்பேவ நகரசபை அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 வது மாடிகள்,
"சுஹுறுபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2022, ஒற்றோபர் 31.

EOG 11 - 0132/1

## கெஸ்பேவ நகர சபை அதிகார பிரதேசத்தினை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி தொடர்பான அறிவித்தல்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டு இலக்கம் 41 இன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(A) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கெஸ்பேவ நகர சபை அதிகார பிரதேசத்தினை உள்ளடக்கிய அபிவிருத்தி திட்டத்தினை, 2022 இன் ஐப்பசி மாதம் 31 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது எனவும் அச்சட்டத்தின் பிரிவு 8(G) இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ),
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 வது மாடிகள்,
"சுஹூறுபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2022, நவெம்பர் 14.*

EOG *11 - 0132/2*

---

## கெஸ்பேவ நகர சபை அதிகார பிரதேசத்தினை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8(A) பிரிவின் அதிகாரங்களுக்கு இணங்க கெஸ்பேவ நகர சபையின் அதிகார பிரதேசத்தினை உள்ளடக்கிய அபிவிருத்தி திட்டத்திற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களினால் குறித்த திருத்தப்பட்ட சட்டத்தின் 8(F) பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2022 ஐப்பசி மாதம் 31 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது என பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**நிமேஷ் ஹேரத்,**
*நகர அபிவிருத்தி அதிசார சபை.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 வது மாடிகள்,
"சுஹூறுபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2022, நவெம்பர் 14.*

EOG *11 - 0132/3*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*